**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, BOOTHAPANDY**
**C.C.No. 63/2019**
**WITNESS:**
**LW.9/PW.9**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுந்தர்மூர்த்தி | வயது : | 47/2026 |
| தகப்பனார் பெயர்: | சின்னநாடார் | தாலுகா: | விளவங்கோடு |
| கிராமம்: | நட்டாலம் | தொழில்: | **காவல் ஆய்வாளர்** |
| Solemnly affirmed by Thiru. Sajith J.K. Castro, Assistant of this Court in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969) on 21st day of August 2026. | | | |
| **As per the circular of the Hon'ble High Court, Madras in R.O.C.No.74663/2024/F1-Dt.21.02.2025 the identity of the witness verified with his / her identity card. Aathar Card of the Witness verified** | | | |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.10.2018 அன்று பூதப்பாண்டி காவல்நிலைத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது பூதப்பாண்டி காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு மாணிக்கம் என்பவர் பதிவு செய்து விசாரணைக்கு வைத்திருந்த பூதப்பாண்டி காவல்நிலைய குற்ற எண் 285/2018 சட்டப்பிரிவு 341, 294(b), 323, 506(i) of IPC வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 04.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தர்மராஜ் மற்றும் சுப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்து மேற்படி இருவரிடமும் பார்வை மகஜரில் கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் செல்லநாடார், ஸ்ரீகிருஷ்ணன், சந்திரன், அனிதா பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மாணிக்கம் ஆகியோர்களை

தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் இருவரும் நீதிமன்ற ஜாமினில் சென்று விட்டனர். பின்னர் வழக்கின் புகார்தாரருக்கு முதலுதவி சிகிச்சை அளித்த பூதப்பாண்டி அரசு மருத்துவரான டாக்டர் வில்லியம் சார்லஸ் என்பவரிடமிருந்து காயச்சான்றிதழ் பெற்று மேற்படி மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரது வாக்குமூலத்திலிருந்தும், காயச்சான்றிதழிலிருந்தும் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவை 341, 294(b), 323, 506(i) of IPC என்பதிலிருந்து 341, 294(b), 323, 325, 506(i) of IPC ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது 341, 294(b), 323, 325, 506(i) of IPC குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **மேற்படி மாதிரி வரைப்படம் அ.சா.ஆ 6 , சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எனது விசாரணைக்கு எடுத்து கொண்டதில் இரு சம்பவங்கள் நிகழ்ந்ததாக துலங்குமா என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் இரு சம்பவங்களின் நேரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது விசாரணையில் கல்லை துணியில்கட்டி அ.சா. 1 ஐ தாக்கியதாக துலங்காது என்றால் சரிதான். எனது இறுதி அறிக்கையில் கைகொண்டு தாக்கியதாக துலங்கும் என்றால் சரிதான். அ.சா. 1 மருத்துவமனைக்கு செல்லும் போது மது போதையில் இருந்ததாக துலங்குமா என்றால் ஆவணத்தை பார்வையிடுகையில் உள்ளது. அ.சா. 1 முதன்முதலில் பூதப்பாண்டி அரசு மருத்துவமனைக்கு தான் சிகிச்சைக்கு சென்றார் என்றும், மேலும் மேல் சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் மருத்துவமனைக்கு சென்றார்

என்றால் சரிதான். மேற்படி ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை மருத்துவரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அங்கு சிகிச்சை அளித்த மருத்துவருரின் மருத்துவ அறிக்கை அடிப்படையில் பூதப்பாண்டி அரசு மருத்துவர் காயச்சான்று அளித்தார் அவரை விசாரித்தால் ஆசாரிப்பள்ளம் மருத்துவமனை மருத்துவரை விசாரிக்கவில்லை. சம்பவ இடம் குறத்தியறை அதிக ஆட்கள் நடமாடும் இடம் என்றால் சரியல்ல. குறிப்பிட்டு கூற இயலாது. சம்பவ இடம் குறத்தியறை அதிக வீடுகள் உள்ள இடம் என்றால் சரிதான். சாட்சிகளை முறையாக விசாரிக்காமல் ஒருதலைப்பட்சமாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறு விசாரணை இல்லை)